பக்கம் எண் 95-ல் அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் ஆற்றிய தொண்டினைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், இதுபோன்றவர்களினுடைய புகைப்படங்களை வைத்து, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஆங்காங்கு வைத்து, மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் மக்கள் அதிகமாக வந்து போகின்ற ஒருசில இடங்களிலே, அதையெல்லாம் ஆல்பமாக போட்டு வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதையும் நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு யோசனையையும் சொல்லி, அதற்கான அனுமதியையும் தந்திருக்கிறார். ஒவ்வொரு சிலையிலும் QR code பொருத்துகின்ற பணி விரைவிலே இன்னும் ஒரு வாரத்திற்குள் நடக்க இருக்கிறது. முதலில், ஐயன் திருவள்ளுவர் சிலையில் அந்தப் பணிகள் துவங்கி, மற்ற எல்லா சிலைகளிலும், நம்முடைய செய்தித் துறையின் சார்பிலே பராமரிக்கப்பட்டு வருகின்ற நினைவு இல்லங்கள்-ஏன் என்று சொன்னால், நினைவு இல்லங்களாக இருந்தால் பரவலாக அந்த கல்வெட்டுகளை வைக்கலாம். சிலையில் குறைந்தபட்சம் 4 இடங்களில் மட்டும்தான் அது பொருத்தமுடியும். எனவே, QR CODE மூலமாக தமிழ்நாடு செய்தித் துறையினுடைய website-ல் இது ஏற்றப்பட்டும், தனித் தனியாகவும், அவர்களைப்பற்றி தெரிந்துகொள்கிற வகையிலே, சிலையினுடைய வண்ணமும் மாற்றப்பட்டு QR CODE பொருத்துகின்ற பணிகளும் இன்னும் ஒரு வார காலத்தில் துவங்க இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

கால்நடை மருத்துவமனை

***21249—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 20]

துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளில் அமருங்கள். இது* live programme. *எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து உங்கள் விருப்பத்திற்கேற்ப வேறொரு இருக்கைகளில் அமர்ந்து பேசாதீர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் 3,025 கால்நடை அலகுகளும், உப்பிலியாபுரம் ஒன்றியம், ஒக்கரை கிராமத்தில் 3,219 கால்நடை அலகுகளும், சோபனபுரத்தில் 3,030 கால்நடை அலகுகளும் இருக்கின்றன. அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 10 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்ற இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதால் எங்களுடைய பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் வரைமுறைகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனைகளை துவங்க இயலாது. முதலில் அந்தப் பகுதியில் 3,000 கால்நடைகள் இருக்கும்பட்சத்தில் அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கப்படும். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள, துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் 3,000 கால்நடை அலகுகள் இருப்பதால் அரசின் வரைமுறைகளின்படி கால்நடை கிளை நிலையம் புதிதாக அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கு ஏற்றாற்போல் தகுந்த முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய துறையூர் தொகுதியில், நடுவலூர் கால்நடை கிளை நிலையத்தில் 5,199 கால்நடை அலகுகளும், பச்சைபெருமாள்பட்டி கால்நடை கிளை நிலையத்தில் 5,744 கால்நடை அலகுகளும் இருப்பதால் அரசின் விதிமுறைகளின்படி, 5,000 கால்நடைகள் இருந்தால், கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு எங்களுடைய துறையூர் பகுதியை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிழக்கு தொடர்ச்சி மலையுடன் சேர்த்து நேற்று மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த மலைப் பகுதியின் அடிவாரத்தில்தான் இந்த பகுதிகளெல்லாம் இருக்கின்றன. இந்தப் பகுதிகள் முழுக்க, முழுக்க விவசாயத்தைச் சார்ந்த பகுதிகளாகும். இங்கு இருக்கக்கூடிய பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் விவசாயத்தை மட்டுமே சார்ந்தவர்கள். எனவே, இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த*

2023 ஏப்ரல் 20]

வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் அதிக கால்நடைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகள் அத்தனையும் கால்நடை கிளை நிலையம் வேண்டும், கால்நடை கிளை நிலையம் வேண்டும் என்றுதான் கோரிக்கைகளாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. நான், தொடர்ந்து கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு என்னென்ன விதிகள் இருக்கின்றன, எப்படி அதை upgrade செய்ய வேண்டும் என்ற வகையிலே பதிலும் சொல்லிக்கொண்டு வருகின்றேன். அந்த வகையில் இந்த நிலைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே, தற்போதுள்ள சூழ்நிலையில் கால்நடை கிளை நிலையங்கள் இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து, அனைத்து சேவைகளையும் கால்நடைகள் வளர்க்கப்படும் இடங்களிலேயே வழங்கும்விதமாக தமிழ்நாட்டின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு நடமாடும் கால்நடை ஊர்தியை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதையும், இந்தச் சேவையை மாண்புமிகு உறுப்பினர் தங்கள் பகுதிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அத்தனை பகுதிகளையும் எங்களது துறையின்மூலம் ஆய்வு செய்து, வரவிருக்கின்ற காலங்களில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைக்கேற்றாற்போல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.